பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

12 05 2026 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சர்வதேச செவிலியர்கள் தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி சிறந்த செவிலியர்களுக்கான ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேர்ள் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

2. அசாமில் பிஜேபி அரசு மூன்றாவது முறையாக இன்று பதவியேற்கிறது. இந்நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

3. மகளிர் மேம்பாடு என்ற நிலையில் இருந்து மகளிர் தலைமையிலான மேம்பாடு என்ற அணுகுமுறையில் இந்தியா செயல்பட்டு வருவதாக மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா கூறியுள்ளார்.

4. நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் ரயில்வே கட்டமைப்புகள் பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

5. ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சர்வதேச செவிலியர்கள் தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி சிறந்த செவிலியர்களுக்கான ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேர்ள் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

இத்தாலியில் பிறந்து செவிலியர் பணியில் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேர்ள்-ன் பிறந்த தினம் ஒவ்வொரு ஆண்டும் மே 12ஆம் தேதி சர்வதேச செவிலியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி இந்தியாவில் சிறப்பாக செயல்பட்ட செவிலியர்களுக்கு தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன.

புதுதில்லியில் குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, சிறப்பாக செயலாற்றிய செவிலியர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவிக்கிறார்.

<<<<>>>>

அசாமில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு மூன்றாவது முறையாக இன்று பதவியேற்கிறது.

திரு. ஹிமந்தா பிஸ்வா சர்மா தொடர்ந்து 2வது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்க உள்ளார்.

அவருக்கு ஆளுநர் திரு. லக்ஷ்மன் பிரசாத் ஆச்சார்யா பதவிப்பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைக்க உள்ளார்.

முதலமைச்சருடன் திரு. ராமேஷ்வர் தெளி, திரு. அதுல் போரா, திரு. சரண் போரோ, திரு. அஜந்தா நியோக் ஆகிய 4 அமைச்சர்களும் பதவியேற்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்ட மத்திய அமைச்சர்களும், பிஜேபி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்களும் பங்கேற்கின்றனர்.

குவஹாத்தியில் உள்ள **Khanapara** கால்நடை மருத்துவக் கல்லூரி மைதானத்தில் பதவியேற்பு விழா நடைபெற உள்ளதாகவும், இதற்காக விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி 5 நாடுகளுக்கு 6 நாள் அரசுமுறைப் பயணமாக வரும் 15ஆம் தேதி புறப்பட்டுச் செல்கிறார்.

முதலில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் செல்லும் அவர், அந்நாட்டு அதிபர் திரு. ஷேக் முகமது பின் சையத் அல் நஹ்யானை சந்தித்து பேச்சு நடத்த உள்ளார்.

அதைத் தொடர்ந்து நெதர்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகளுக்குச் செல்லும் பிரதமர், அந்நாடுகளின் பிரதமர்களை சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்தவுள்ளார்.

பின்னர் நார்வே செல்லும் பிரதமர், இந்தியா-நார்டிக் உச்சிமாநாட்டில் பங்கேற்க உள்ளார்.

**43** ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய பிரதமர் ஒருவர் நார்வே செல்வது இதுவே முதல் முறையாகும்.

அதனைத் தொடர்ந்து பிரதமர் இத்தாலி செல்ல உள்ளார்.

பிரதமரின் இந்தப் பயணம் இந்த நாடுகளுடன் இந்தியாவின் நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மகளிர் மேம்பாடு என்ற நிலையில் இருந்து மகளிர் தலைமையிலான மேம்பாடு என்ற அணுகுமுறையில் இந்தியா

செயல்பட்டு வருவதாக மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா கூறியுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த மகளிர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு புதுதில்லியில் நேற்று மக்களவைத் தலைவரை சந்தித்தது.

அப்போது பேசிய அவர், இரு நாடுகளுக்கும் இடையே வலுவான நல்லுறவு நிலவி வருவதைக் குறிப்பிட்டார்.

இரு நாடுகளும் பல நூற்றாண்டுகள் பழமையான கலாச்சார, ஆன்மிக பிணைப்புகளைக் கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற ஒத்துழைப்பு வலுவடைந்து வருவது திருப்தியளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் ஜனநாயக அமைப்புகளில் மகளிரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மகளிர் தலைமையிலான மேம்பாடு என்ற கருத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதியுடன் செயல்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர் இடஒதுக்கீட்டின் மூலம் 14 லட்சம் பிரதிநிதிகள் பல்வேறு பதவிகளை வகித்து வருவதாக திரு. ஓம் பிர்லா கூறினார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் ரயில்வே கட்டமைப்புகள் பெருமளவு மேம்படுத்தப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் **Dohrighat - Aunrihar** இடையேயான பயணிகள் ரயிலை காணொலி மூலம் நேற்று அவர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த ரயில் பூர்வாஞ்ச்சல் பகுதியில் போக்குவரத்து இணைப்பை வலுப்படுத்துவதில் முக்கியப் பங்காற்றும் என்று அவர் குறிப்பிட்டார்.

முன்பு நீண்ட காலம் நிலுவையில் இருந்த ரயில்வே திட்டங்கள் 2014ஆம் ஆண்டுக்குப் பிறகு விரைந்து செயல்படுத்தப்பட்டதாக அவர் கூறினார்.

கடந்த 12 ஆண்டுகளில் உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் ரயில்வே கட்டமைப்புகளை மேம்படுத்த பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உத்தரப்பிரதேசத்தில் அம்ரித் பாரத் ரயில்நிலைய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் **157** ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படுவதாகவும், இதில் **28** நிலையங்களில் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

இந்தியா — ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், புதிய அத்தியாயத்தின் தொடக்கம் என்று போர்ச்சுக்கல் அமைச்சர் திரு. **Joao Rui Ferreira** கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த ஒப்பந்தத்திற்கு தொடக்கத்திலிருந்தே போர்ச்சுக்கல் ஆதரவு அளித்து வந்ததை சுட்டிக்காட்டினார்.

இந்தியா விரைவில் **3**வது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்றும் அவர் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பெரிய அளவிலான சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, உலக அளவில் இந்தியா பொருளாதாரத்தில் வலிமைமிக்க சக்தியாக உருவெடுத்து வருவதாகவும் போர்ச்சுக்கல் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

விவசாயிகளுக்கு தேவையான உரம் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த உரத்துறை கூடுதல் செயலர் திருமதி. அபர்ணா சர்மா, தற்போது 51 சதவீதம் அளவிற்கு உரங்கள் கையிருப்பில் உள்ளதாக கூறினார்.

வழக்கமாக 33 சதவீதம் உரம் மட்டுமே கையிருப்பில் வைக்கப்படுவதாகவும், கூடுதல் தேவையை கருத்தில் கொண்டு கையிருப்பு விகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உரங்களின் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் அவர் கூறினார்.

தேவைக்கேற்ப உரங்கள் இறக்குமதி செய்யப்படுவதாகவும் திருமதி. அபர்ணா சர்மா தெரிவித்தார்.

<<<<>>>>

ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு புதுதில்லியில் நேற்று மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டிலை சந்தித்துப் பேசினார்.

மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நீர்வளத்துறை திட்டங்கள் தொடர்பாக அவருடன் திரு. சந்திரபாபு நாயுடு ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா புதுதில்லியில் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவை நேற்று சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது ஜம்மு-கஷ்மீரின் நிர்வாகம், வளர்ச்சி மற்றும் மக்கள் நலத்திட்டங்கள் போன்றவை குறித்து திரு. உமர் அப்துல்லா உள்துறை அமைச்சருடன் ஆலோசனை மேற்கொண்டார்.

ஜம்மு-கஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்குவது தொடர்பாகவும் திரு. அமித் ஷாவுடன் விவாதித்ததாக திரு. உமர் அப்துல்லா சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியாவும்-ஜப்பானும் தொழில்துறை ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்க முடிவு செய்துள்ளன.

வெளியுறவுத்துறை செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி மற்றும் புதுதில்லி வந்துள்ள ஜப்பான் வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. டகிரோ ஃபுனக்கோஷி ஆகியோர் தலைமையில் இந்தியா - ஜப்பான்

பொருளாதார ஒத்துழைப்பு ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் செமிகண்டக்டர், முக்கிய கனிமங்கள், தகவல் தொழில்நுட்பம், மருந்துகள் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு மேலும் வலுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

<<<<>>>>

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப், **3** நாள் அரசுமுறைப் பயணமாக நாளை சீனா செல்கிறார்.

சீன அதிபர் திரு. **Xi Jinping** அழைப்பை ஏற்று அவர் இப்பயணத்தை மேற்கொள்வதாக அந்நாட்டு அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மேற்காசியாவில் நிலவிவரும் பதற்றமான சூழ்நிலைக்கு இடையே இரு தலைவர்களின் சந்திப்பு முக்கியத்துவம் பெறுவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

அசாம், மேகாலயா, சிக்கிம் ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, பஞ்சாப், ஹரியானா, பிஹார் ஆகிய மாநிலங்களின் சில இடங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

குஜராத், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் வெப்பநிலை அதிகரிக்க கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

15 மற்றும் 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

தாஷ்கண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் இந்தியாவின் குஷிசந்த், மம்தா உள்ளிட்டோர் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

மகளிர் பிரிவில் இந்தியாவின் 8 வீராங்கனைகள் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்று பதக்கத்தை உறுதி செய்துள்ளனர்.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

தரம்சாலாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த பஞ்சாப் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 210 ரன் எடுத்தது.

211 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தில்லி அணி 19 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 216 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இன்று நடைபெறும் போட்டியில் குஜராத் அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

---------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் ஈஸ்ட் பெங்கால் - பஞ்சாப் அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

கொல்கத்தாவில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் கோல் எதுவும் போடவில்லை.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் காசி அணி - மோகன் பஹான் அணியை எதிர்கொள்கிறது.

**கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.**

**<<<<The End>>>>**